# கர்த்தருடைய திருப்பந்தி

***நாராயணவடிவு @ ஏஞ்சலின் மார்கரெட்,*** **B. Th,**
க. சாயர்புரம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6396

***முன்னுரை***

*உலகத்தில் மனிதன் வாழ்வதற்கு உணவு உடை உறைவிடம் இம்மூன்றும் இன்றியமையாதது. அதிலும் உணவு இல்லாமல் மனிதன் வாழ முடியாது. சோர்வடைந்து கண்கள் இருண்டு பலனற்றவனாய் மாறிவிடுகிறான். இறுதியாக அவன் வாழ்வின் முடிவுக்கு கொண்டு செல்லப்படுகிறான். ஆனால் நல்ல உணவு உண்டு வாழ்பவன் பலமுடனும் நோயின்றியும் நல்வாழ்வு வாழ்கிறான். உணவு மனிதனை பலப்படுத்தக்கூடியதாய் இருக்கிறது. ஆம் திருவிருந்து என்பதும் நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவை பலப்படுத்துகிறது. திருவிருந்து என்பது தேவன் தெரிந்து கொண்ட இஸ்ரவேலருக்கு மாத்திரமல்ல இயேசுவை தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்த உணவு. என்னுடைய பாவத்திலிருந்து நான் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டுவிட்டேன் என்ற நிச்சயத்தோடு இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தேவன் கொடுத்த அன்பின் விருந்து. இந்த அன்பின் விருந்தைப் பற்றி தெரிந்து கொள்ளும் வண்ணமாக இக்கட்டுரை அமைகின்றது. கர்த்தருடைய திருப்பந்தி என்பது இயேசு கிறிஸ்துவின் இறுதி உணவைக்குறிக்கிறது. திருப்பீடத்தின் அருட்சாதனம் மற்றும் ஒன்றினைப்பின் திருப்பந்தி எனவும் அழைக்கப்படுகிறது. திருப்பீடத்தின் அருட்சாதனம் என்பது இயேசுகிறிஸ்துவின் திருச்சரீரமும் திரு இரத்தமும் ஆன்மாவும் இறைத்தன்மையும் அடங்கியது என்பது கத்தோலிக்கத் திருச்சபையினரின் நம்பிக்கை. ஆனால் சீர்திருத்த சபையாராகிய நமக்கு கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் ஒரு அடையாளம்.*

***பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கர்த்தருடைய பஸ்கா***

1. கர்த்தர் இஸ்ரவேலரை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால் இது அவருக்கென்று முக்கியமாய் ஆசரிக்கத்தக்க ராத்திரியாயிற்று (பஸ்கா)
2. வீட்டில் இருக்கிறவர்கள் அல்லது ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிப்பதற்குப் போதுமான பேர் இல்லாமல் போனால் அவனுடைய அயல் வீட்டுக்காரனுடன் சேர்ந்து புசிக்கலாம்
3. அந்நிய புத்திரன், பணத்தினால் கொள்ளப்பட்ட அடிமையானவன் புசிக்கக் கூடாது. விருத்தசேதனம் பண்ணினபின்பு பஸ்காவை புசிக்கலாம்.
4. ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புசிக்கவேண்டும்
5. ஒரு வயது பழுதற்ற ஆண் ஆட்டுக்குட்டி அடிக்கப்படவேண்டும் 1 (யாத் 12 : 5)
6. அது செம்மறியாடாகவோ அல்லது வெள்ளாடாகவோ இருக்கலாம்.
7. அந்த நாள் உங்களுக்கு விடுதலையின் நினைவு கூறுதலான நாள். அது உங்களுக்கு நித்திய நியமமாக ஆசரிக்கவேண்டும் 2 ( யாத் 12 : 14)

**புளிப்பில்லா அப்பபப்பண்டிகை**

1. ஏழு நாள் ஆசரிக்கப்படும் பண்டிகை. ஏழு நாளும் மக்கள் புளிப்பில்லாத மாவினால் செய்த அப்பத்தை புசிக்க வேண்டும்
2. முதல் நாள் மற்றும் ஏழாம் நாளில் பரிசுத்த சபை கூடுதல்
3. புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அவன் அறுப்புண்டுபோவான 3 (யாத் 12 : 19)

(புதிய ஏற்பாட்டில் அபாத்திரமாய் பங்கு கொள்ளுகிறவன்)

பஸ்கா பண்டிகை என்பது கிறிஸ்து அடிக்கப்படுவதற்கு நிழல்

புளிப்பில்லா அப்பபப்பண்டிகை என்பது கிறிஸ்து நம்மை பாவத்திலிருந்து சுத்திகரிப்பதைக் குறிக்கிறது

**புதிய ஏற்பாட்டில் பஸ்கா**

புளிப்பில்லா அப்பபப்பண்டிகையின் முதல்நாளில் பஸ்காவை ஆசரிக்க மேல்வீட்டில் கூடினர். விடுதலையின் நாளை திரும்பிப்பார்க்கும் ஒரு நினைவு கூறுதல் பண்டிகையை ஆசரிக்கவே சீஷர்கள் பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள். இயேசுவும் அவருடைய சீஷர்களும் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து ஆசீரவதித்து அதைப் பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது என்னை நினைவு கூறும்படி 4 (லூக் 22:19) இதைச் செய்யுங்கள். பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள் இது உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத் தினாலாகிய புதிய உடன்படிக்கை இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அவருடைய சீஷர்கள் மூலமாய் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்யத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணினார்கள் (அப் 2:46)

**பஸ்கா பண்டிகை பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஒப்பீடு**

| கர்த்தருடைய பந்தி | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|---|
| பஸ்கா | பழுதற்ற ஆடு அடிக்கப்பட்டது | இயேசு பழுதற்ற ஆடாக அடிக்கப்பட்டார் |
| புளிப்பில்லா அப்பபப்பண்டிகை | புளிப்பில்லா அப்பம் புசிக்க வேண்டும் (7 நாள்) | பாவம் இல்லாத இயேசு நமக்காக அடக்கம் பண்ணப்பட்டார் புளிப்பு என்பது பாவத்தைக் குறிக்கும் |
| பஸ்கா போஜனம் | வருடந்தோறும் அநுசரிக்கவேண்டும் | சபை கூடிவரும்பொழுது (அனுதினமும்) |
| பஸ்காவின் நியமம் | விருத்தசேதனம் பண்ணினவன் புசிக்கலாம் இது நித்திய நியமம் | மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்தவர்கள் புசிக்கலாம் இயேசுவின் சரீரமாகிய அப்பத்திலும் அவருடைய இரத்தமாகிய பானத்திலும் பங்கு பெறலாம். இது நித்திய கட்டளை |

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்திற்கு எழுதின நிருபத்தில் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இந்த சாக்கிரமந்துகள் எப்படி நிகழ்ந்தன என்பதை விளக்குகிறார். அதிலும் குறிப்பாக திருவிருந்தைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் அனைவரும் மேகத்தினால் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள், ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள், ஞான பானமாகிய ஞானக் கன்மலையின் தண் ணீரைக் குடித்தார்கள் அந்தக் கன்மலை கிறிஸ்துவே5 (1 கொ10 : 4) என்கிறார்.

### திருவிருந்தில் யாரெல்லாம் பங்குகொள்ளலாம்

மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஜாதி, இன, மொழி வேறுபாடுகள் இன்றி தங்களுடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் ஆன புதிய உடன்படிக்கையை நினைவுகூறும்படி யாவரும் இயேசுவின் சரீரமாகிய அப்பத்திலும் அவருடைய இரத்தமாகிய பானத்திலும் பங்கு பெறலாம். இதுவே நமக்கு நித்திய கட்டளை. கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொள்ளும் ஸ்தானத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவின் பலி செலுத்தப்பட்டது. அதேபோல் கர்த்தருடைய பந்தியும் இரட்சிக்கப்பட்டவர்கள் கூடுகிற இடத்தில் சீஷர்களால் கொடுக்கப்பட்டது. ஆண்டவருடைய இறுதிக் கட்டளை6 (மத் 28:19, 20) நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.

### எப்படியெல்லாம் திருவிருந்தில் பங்குபெறக்கூடாது

அபாத்திரமாய் போஜனம் பண்ணினால் அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும். அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாய் இருப்பான்.

புதிய உடன்படிக்கை விசுவாசிகளுக்கு திருவிருந்தைக் குறித்த பவுலின் எச்சரிப்பு புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டைப்பண்ணி இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? (1 கொ 11:22) ஆகையால் போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையும் குறித்தாவது ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக (கொலோ 2:16, 17) ஏனெனில் அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது. கர்த்தருடைய பந்தியை அசட்டைப்பண்ணாமல் நம்மை நாமே சோதித்து அறிந்து பங்குபெறவேண்டும் என்கிறார். கர்த்தருடைய பந்தி என்பது (1 கொ 11: 20 - 21) எங்கு கூடி வருகிறோமோ அவனவன் தன் தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடாதபடி (1கொ 11 : 20)[7] ஒருவருக்காக ஒருவர் காத்திருந்து (1 கொ 11 : 33)[8] ஒரே அப்பத்தில் பங்கு பெற்று[9] (1கொ 10:17) ஒரே பாத்திரத்தில்[10] பானம் (1 கொ 11:27) பண்ணக்கடவன் என்று பவுல் அறிவுறுத்துகிறார்.

### முடிவுரை

பழைய உடன்படிக்கை பூரணமாகவில்லை அது மீறப்பட்டது ஆகவே இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார் அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை[11] (எரே 31:31) பண்ணுவேன். ஆகவே வேதத்தில் வீடுகள் தோறும் என்று கூறப்பட்டது என்பது இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப் 2:47). வீடுகள் தோறும் மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் ஒருவருக்காக ஒருவர் காத்திருந்து வேறுபாடு இல்லாமல் போஜனம் பண்ணினார்கள். ஆகவே ஆவிக்குரிய

இஸ்ரவேலராகிய நாமும் திருவிருந்தை ஆசரிக்கும்பொழுது நம்முடைய பிதாவாகிய தேவன் நமக்காய் விலைக்கியரயமாக பலியிடப்பட்ட நம்முடைய பஸ்காவாகிய இயேசுகிறிஸ்துவையும் அவருடைய மரணத்தையும் நினைவு கூறுவோம். அவருடைய அன்பின் ஆழத்தையும் புரிந்துகொள்வோம். திருவிருந்தில் கலந்து கொள்ளும் பொழுதெல்லாம் கர்த்தருடைய மரணத்தையும் அவருடைய வருகையையும் நினைவுகூர்ந்து தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவை உறுதி செய்வோம். ஆமென்

**அடிக் குறிப்புகள்**

1. யாத் 12:5
2. யாத் 12:14
3. யாத் 12:19
4. லூக் 22:19
5. 1கொ 10:4
6. மத் 28:19.20
7. 1கொ 11:20
8. 1கொ 11:33
9. 1கொ 10:17
10. 1கொ 11:27
11. எரே 31:31